சுருக்கம்

கேபிள் தொலைக்காட்சி - கேபிள் தொலைகாட்சி இணைப்புகளுக்கு கேளிக்கை வரியை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளே வசூலிப்பது குறித்து வழிமுறைகள் வெளியிடப்படுகின்றன.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை**

அரசு ஆணை (நிலை) எண். 91 நாள் 30.6.2000

படிக்கப்பட்டது:

அரசு ஆணை(நிலை) எண்.99 வணிக வரித்துறை நாள் 14.6.2000

**ஆணை:**

2000-2001ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க, கேபிள் தொலைக்காட்சியின் மீது விதிக்கப்படும் வரியை உள்ளாட்சி அமைப்புகளே வசூலிக்க வகை செய்து 1939ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி சட்டம் திருத்தப்பட்டது. மேற்கண்ட சட்டத்தின் பகுதி நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம் 1.7.2000 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. அதன்படி

(1) கேபிள் தொலைகாட்சி நடத்துபவர்கள், ஒவ்வொரு இணைப்பிற்கும், மாதம் ஒன்றுக்கு பின்வரும் வரி விகிதத்திற்கு மிகாமல் உள்ளாட்சி அமைப்புகள் வரி விதித்து வசூலிக்கலாம்.

(1) மாநகராட்சிகள் ரூ.20 (ரூபாய் இருபது மட்டும்)

(2) நகராட்சிகள் ரூ.15 (ரூபாய் பதினைந்து மட்டும்)

(3) பேரூராட்சிகள் ரூ.10 )ரூபாய் பத்து மட்டும்)

(2) கேபிள் தொலைக்காட்சி நடத்தும் உரிமையாளர் ஒவ்வொருவரும் வரி கட்டுவது குறித்து ஓர் அறிக்கையை குறிப்பிட்ட கால அளவிற்குள் உள்ளாட்சி அமைப்பின் ஆணையர்/நிர்வாக அமைப்பு அதிகாரியிடம் அளிக்க வேண்டும். அவர் அவற்றை பரிசீலித்த பின், ரூபாய் பத்தாயிரம் வைப்புத்தொகையை பெற்றுக்கொண்டு பதிவு சான்றிதழ் அளிப்பார்.

2. இத்திருத்தச் சட்டம் 1.7.2000லிருந்து நடைமுறைக்குக் கொண்டு வர வணிகவரித்துறை பர்ர்வையில் கண்ட அரசாணையில் அறிவிக்கை வெளியிட்டுள்ளது. இச்சட்டத் திருத்தத்தை 1.7.2000 முதல் நடைமுறைப்படுத்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்காக தனி விதிகள் 1939-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைவரி சட்டத்தின்கீழ் வெளியிட வேண்டும். விதிகள் தயாரிக்க போதிய அவகாசம் இல்லாமல் இருப்பதால், விதிகளை தனியாக வெளியிடலாம் என அரசு முடிவு செய்துள்ளது. விதிகள் வெளியிடும் வரை 1.7.2000 முதல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் பின்வரும் வழிமுறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

(1) 30.6..2000 வரை கேபிள் தொலைக்காட்சியின் மீதான வரி வசூல் செய்தல், அக்காலத்திற்குட்பட்ட மேல்முறையீடு மீது தீர்ப்பு வழங்குதல் போன்றவைகளை வணிகவரித்துறையே தொடர்ந்து மேற்கொள்ளும்.

(2) 1.7.2000 முதல் கேபிள் தொலைக்காட்சியின் மீது கேளிக்கை வரி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரி விகிதத்திற்கு மிகாமல் ஒரு மாதத்திற்கு வரி நிர்ணயம் செய்து வசூல் செய்ய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

(3) புதிய விதிகள் வெளியிடும் வரை, தற்போது நடைமுறையிலுள்ள 1939-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி விதிகளை கீழ்க்கண்ட மாற்றங்களுக்குட்பட்டு பின்பற்றுமாறு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

(1) கேளிக்கை வரி அதிகாரிகளுக்கு (நுவேநசவயயைஅநவே கூயஒ டீககைஉநச) வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் ஆணையர் மற்றும் செயல் அலுவலர் பயன்படுத்தலாம்.

(2) 1.7.2000க்கு பிறகு வரி மற்றும் அபராதத் தொகைகளை சம்மந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் செலுத்த வேண்டும்.

(3) 1.7.2000க்கு பின்னர் கேபிள் தொலைக்காட்சியின் வரி விதிப்பின் மீது செய்யப்படும் மேல்முறையீட்டை வரிவிதிப்பு மேல்முறையீட்டு தீர்ப்பாயம் / வரி விதிப்பு மேல்முறையீட்டுக்குழு ஆய்வு செய்து ஆணை வழங்கப்படவேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. மாலதி
அரசு செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 5
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை 108
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள் (மேயர் மூலமாக)
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்
அனைத்து பேரூராட்சி உதவி இயக்குநர்கள்
அனைத்து நகராட்சி ஆணையர்கள் (தலைவர் மூலமாக)
அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள் (தலைவர் மூலமாக)
வணிகவரித்துறை/ஊரக வளர்ச்சித்துறை, சென்னை 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.1, மாந.2, நநி4, வரவு செலவு) துறை

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஒம்/-
பிரிவு அலுவலர்